RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt2224

OPEN ACCESS

# பெண் தெய்வ வழிபாட்டை முன்னிறுத்தி தமிழ் உலகமும், திரை வெளிகளும்

## ப. பண்பு செல்வன் [அ, ஆ, *], வே. இளம்பரிதி [இ]

[அ] இதழியல் மற்றும் மக்கள் தொடர்புத் துறை, மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை-625021, தமிழ்நாடு இந்தியா

[ஆ] காட்சி தொடர்புத் துறை, பூ.சா.கோ. கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவை-641014, தமிழ்நாடு இந்தியா.

[இ] திரைப்படம் மற்றும் மின்னணு ஊடக ஆய்வு மையம், மதுரை காமராஜர் பல்கலைக்கழகம், மதுரை-625021, தமிழ்நாடு இந்தியா.

# Traditional Goddess worship culture of Tamil society and its impact on cinematic screen portray of this generation

**P. Panbu Selvan [a, b, *], V. Ilamparithi [c]**

[a] Journalism and Mass communication, Madurai Kamaraj University, Madurai–625021, Tamil Nadu, India

[b] Department of Visual communication, PSG College of Arts & Science, Coimbatore–641014, Tamil Nadu, India

[c] Centre for Film and Electronic Media studies, Madurai Kamaraj University, Madurai–625021, Tamil Nadu, India

* Corresponding Author: panbhu@gmail.com

Received: 01-01-2022
Revised: 21-02-2022
Accepted: 24-02-2022
Published: 09-03-2022

Check for updates

### ABSTRACT

The life of Ancient Tamil people was beautiful and full of emotions. They were the ones who gained great knowledge and experience from every phase of their lives. The knowledge and experience conserved, concocted and passed on in fragments by older generations. The people had begun to transform their love into worship and celebration. They preserved it in various art forms such as rhetoric, storytelling, painting, sculpture, street play, drama and literature for the future generations to know and cherish it. Different forms of media play a special role in transferring the same to people. Among these, cinema holds a pivotal space. The film captures the social structure born out of the aforementioned people's faith and conveys it through its story, shedding its light in the minds of the people. It is natural for people's overwhelming beliefs to be reflected as stories of God and Goddesses. This article describes the worship of goddesses in literature and its relation to celebrating female actors on-screen in and by a Tamil society.

**Keywords:** Goddess, Tamil Literature, Tamil Cinema, Female Actors, Female Idols

## முன்னுரை

தமிழுலகம் தொன்மையும், பழமையும் வாய்ந்தது. சமூகப் பண்பாடு நிரம்பியது. கால நீட்சியில் நீண்டு பயணிக்கிறது. இதற்கு, "கல் தோன்றி மண் தோன்றா காலத்தே முன் தோன்றிய மூத்தக் குடி தமிழ் குடி". எனும் பாடல் சான்றாக அமைகிறது. தமிழ் நிலத்தில், நல்வாழ்வியலை வழங்கிய பெண் உலகை, ஆரம்ப புள்ளியாகவும், மையமாகவும் கொண்டு நகர்கிறது இக்கட்டுரை (Iyaarinathanar, 2005).

ஆண்களால் அதிகாரம் வலிய திணிக்கப்பட்டு ஆளப்படும் இவ்வுலகம், பெண்களால் உயிர் பெறுகிறது. பெண்ணுக்காகவே நெடும் தேடலும், சிறு போரும், நனி படைப்பும், நுண் கலையும்

உருவாகிறது. "நானிலத்தில் மார்தட்டும் ஆடவர்கள் சுவை வாழ்வில் கடைத்தேற தக்கதான சூட்சுமம் பெண்களிடம் அமைந்தது அன்றோ" என பெண்ணின் சிறப்பை விளக்கியுள்ளார் (Bharathidasan 2016). பல்வேறு காலகட்டங்களில் இயல், இசை, நாடகம் என கலை நன்கு வளர்ந்து வந்திருக்கிறது. நடனம், கூத்து என வளர்ந்த கலைகளில் பெண்களின் பங்கு அதீதமானது. "தாய்த் தெய்வத்தின் வழிபாட்டில் துணங்கைக் கூத்து நடைபெறும்" (Paramasivan, 2006).

## வாழ்வியலில் இறைவி

தமிழுலகம் குறும், நெடும், கதைகளை உயிர்ப்போடு பல நூற்றாண்டுகள் மன வழி கடத்தி பாதுகாத்து வருகிறது. அவை மக்களின் உள்ளங்களில் மாசற்று, நன்கு பதிந்தும் இருக்கிறது. கோயில்கள் மனங்களின் ஒத்த சங்கத்திற்கான இடமாகிறது. ஆடல், பாடல், நாடகம் என கலைகள் எடுத்தாளப்படும் தளமாக இருக்கிறது.

நமது ஊர்களில், கிராமங்களில் வெப்ப அல்லது கோடைக் காலங்களில் கோவில் திருவிழா அம்மன் சிலை வழிபாட்டை முன்னிறுத்தியே நடைபெறுகிறது. இவை பாதுகாப்பை நல்க நிறுவப்பட்டதாக அறிய முடிகிறது.

"வெயிலு வந்தால் கருக்கினில் அமர்ந்தாள் என்பன அவற்றில்

சிலவாகும்"

பெரும்பாலும் பெண் கடவுள்கள் அன்பை, பாதுகாப்பை உறுதி செய்வதாக உள்ளன (Paramasivan, 2006). சில தெய்வங்கள் ஊர் எல்லைகளில் அமர்ந்து மக்களைக் காப்பாற்றும் நம்பிக்கையையும் தருகின்றன. அதுவே எல்லை அம்மன் என்பதாக பின்னாளில் அறியப்படுகிறது.

கடவுள், இறைவி சிலைகள் மக்களுக்கு அன்பை, பெரும் வாழ்த்தை, வளத்தை, பண்பாட்டுக் கூறுகளை, ஒருவித எதிர்பார்ப்பை பூர்த்தி செய்யும் வழியாக இருக்கிறது. நம்பிக்கை அதீதமான நிலையில் ஒரு வித இயங்குதல் தன்மையைத் தருகிறது. அதன் மீதான கட்டமைப்பு அறிவின் மீதும் படர்கிறது. வாழ்வியல் தன்மையில் இது பெரும் தாக்கத்தை உருவாக்குகிறது. எல்லா பெண் கடவுள்களும், சிலைகளும் பொறுமை காப்பதாகவோ, நிதானம் கொண்டதாகவோ இருப்பதில்லை.

மாறாக சில பெண் கடவுள்கள் உக்கிரம் நிறைந்ததாக போரின் தன்மைக்கு முன்னோடியாக உள்ளதை வரலாறு உரைக்கிறது. தமிழகத்தில் துர்க்கை, கொற்றவை என்பவை சில உதாரணங்கள்.

. "கானத்து எருமை கருந் தலை மேல் நின்றாயால்"

கொல்லி மலையில் உள்ள கொல்லிப் பாவை மிகச்சிறந்த எடுத்துக்காட்டு (Ilangovadikal, 2005).

கன்னியாகுமரியில் உள்ள குமரி தெய்வம், திருநெல்வேலி காந்திமதி அம்மன், மதுரை மீனாட்சியம்மன், திருவானைக்கா அகிலாண்டேஸ்வரி, காஞ்சி காமாட்சி என்பன போன்ற சில தாய் தெய்வங்களை இவ்வகையில் நம்மால் குறிப்பிட்டுச் சொல்ல முடியும் (Paramasivan, 2006).

சிறு தெய்வ வழிபாட்டு முறைகளில் மட்டும் பெண் கடவுள் வழிபாடு நிறைவடையவில்லை. மேலாக இன்னும் பிற வாழ்வியல் நெறி கொண்ட சமய நெறிகளிலும் (சமண) பெண் தாய் தெய்வ வழிபாடு உண்டு.

"காமாட்சி தெய்வம் கௌதம புத்தரின் தாயான தாரா தேவி வழிபாட்டில் இருந்து தோன்றியிருக்க வேண்டும்" (Paramasivan, 2006).

கிறித்துவ மார்க்கத்தில், அந்த மக்களிடையேயும் அவர்தம் சிந்தனையிலும் கூட இயேசு கிறித்துவின் தாயான மேரி வழிபாடு (மரியாள்) (நம் ஊரில் மாரியம்மன் போன்று) சிலை வழிபாடாக நம் நாட்டு வழக்கு முறையில் கடைபிடிக்கப்பட்டு, தொடர்ந்து இருந்து வருகிறது. “திருச்சி மாவட்டம் ஏலாக்குறிச்சியில் தூய மரியாளின் பெயரில் 18 ஆம் நூற்றாண்டில் ஒரு கோயிலைக் கட்டினார் வீரமாமுனிவர்” (Paramasivan, 2006).

## பெண்ணும் அவர் சார்ந்த வழிபாடும்

கடவுளர்கள், இறைவியர் எக்காலத்தில் வாழ்ந்தனர்; யாரால் உருவாயினர், என்பதை கடந்து அவர்கள் போற்றப்பட வேண்டியவர்கள். அதனால் அவர்கள் பற்றிய கேள்விகள் தேடுதலின் பாதையை நீட்டிக்க வாய்ப்பளிக்கிறது. இன்னும் தமிழக உள்மாவட்டங்களில் பல இடங்களில் பெண் தன்மையை பெண் பெருமையை உணர்த்தும் பெண்ணுறுப்பை வடிவை...கொண்டாடும் வழிபாட்டு முறையும் வழக்கில் உள்ளது. "தாய் தெய்வ வழிபாட்டின் மூலம் வடிவான யோனி தெய்வ வழிபாடு இன்னும் தமிழ்நாட்டு குடும்பங்களில் நடைமுறையில் உள்ளது" (Paramasivan, 2006). இத்தருணம் கடவுள் தன்மைக்கு உயர்ந்த உள்ளங்கள் பற்றியது. அவ்வகையில் கண்ணகி, குந்தவை பிராட்டியார், ஆண்டாள், என எண்ணிலாப் பெண்கள் சமூகத்தில் நல் விளைவை உருவாக்கியுள்ளனர்.

## அரசியரும் நினைவு வீடுகளும்

கடவுள் தன்மைக்கு அடுத்து அதிகாரப்பூர்வ தன்மை அரசியல் மட்டுமே. அரசியல் அரசு மட்டும் சார்ந்ததல்ல. அறம் சார்ந்தது.

பெரும்பாலும் அரச மக்கள் மாண்டால் படை வீடுகள் ஏற்பட வாய்ப்புண்டு. பெண்ணரசிகள் மகுடத்தில் இருந்து இயற்கை நிலை எய்த அவர்களுக்கு நினைவு வீடுகள் எழுப்பப்படும். அங்கே சிவ மூர்த்தி சிலைகள் அவர்தம் அடையாளமாக உருவாக்கப்படும். அவர்கள் அவதாரங்களாக உருவகப்படுத்தப்படுகின்றனர். அரசுரிமை நடைபெற்ற காலத்தில் இத்தகு பெண்களின் நிலை, நமக்கான வழிபடு தளமாக, நினைவு கொள்ளும் இடமாக உள்ளது. இது வரலாற்றை வாசிக்க நமக்கு இடமளிக்கிறது. பின்னால் அடுத்த தலைமுறைக்கான அறிதலின் நீட்சி ஆகிறது.

## கண்ணகி

தமிழ் நிலத்தில் கற்பின் தன்மையால் உயர்ந்த கண்ணகி தனிப்பெரும் இடத்தில் உள்ளார். கண்ணகி எனும் பத்தினி பெண்ணிற்கான கோவில் தமிழக கேரள எல்லையில் காணக் கிடைக்கிறது. ஐம்பெரும் காப்பிய நூலான சிலப்பதிகாரம், வஞ்சிக்காண்டம், காட்சிக் காதையில்,

"பொதியில் குன்றத்துக் கல் கால்கொண்டு

முது நீர் காவிரி முன்துறை படுத்தல்

மட பதின் மாண்ட மாபெரும் பத்தினி

கடவுள் எழுத ஓர் கல் தரான் எனின்"

என கண்ணகிக்கு இமயத்திலிருந்து கல் கொண்டு வந்த கதையை பதிவு செய்கிறார் இளங்கோவடிகள் (Ilangovadikal, 2005).

"பால் பெற வகுத்த பத்தினிக் கோட்டத்து இமையவர் உறையும் இமயச் செல்வரை தெய்வம் கைவினை முற்றிய தெய்வ படிமத்து" என நீள்கிறது (Ilangovadikal, 2005).

## ஆண்டாள்

பெயரே ஆளும் தன்மை உடையதாக உள்ளது. கண்ணன் மேல் பேரன்பு கொண்டவளாக, பெரும் தலைவியாக ஆண்டள் அறியப்படுகிறார். திருப்பாவை பாடல்கள் வழி தனது அன்பு உணர்வுகளை பாடல் வரியில் பதிவிடுகிறார். திருவில்லிபுத்தூரில் அருள்மிகு ஆண்டாள் கோவில் நமக்குப் பெரும் நினைவுகளை வழங்குகிறது. இப்படி பெண் கடவுள்கள், தமிழகத்தில் தமக்கான பக்தர் கூட்டத்தை பெற்றுள்ளனர்.

## தமிழ்த் திரை - பெண் இருப்பும், வழிபாடும்

ஓவியம், பாடல், என கலை மெல்ல, மெல்ல அறிவியலோடு வளர்கிறது. பின் அவை புகைப்படம் ஆகிறது. அதன்வழி நகரும் படம் ஆக உருமாற்றம் அடைகிறது. அங்கு கலை வணிக ஓட்டம் எடுக்கிறது. கலை பலருக்கு வாழ்வளிக்கிறது. வாழ்க்கையைத் தொழில்நுட்பத்தோடு நகர்த்துகிறது. 1918 முதல் தமிழ் திரைப்படம் (கீசக வதம், R.நடராஜ முதலியார்) தோன்றிய நாளில் பெண் பாத்திரங்களில் நடிக்க பெரிதாக யாரும் முன்வரவில்லை. மெல்ல, மெல்ல அதன் பின்னர் பேசும் படங்கள் தோன்றி வளர்கிறது. பெண்கள் மெல்ல திரையில் தோன்றத் தொடங்குகின்றனர்.

இதில் நடிகர், நடிகையர் பெருவாரியான கதைகளின் முகம் ஆகின்றனர். அவர்களே பெரும்பாலும் கொண்டாடப்படுகின்றனர். வாழ்க்கையின் வழிபாட்டு பக்கங்களில் முன்நிறுத்தப்படுகின்றனர். கதாபாத்திரத் தன்மை, அதில் காட்டப்படும் தனித்துவம், அதனை மெருகேற்றும் கலை, முகபாவனை, ஒப்பனை, சிகை, உடல் உடை அழகு, வண்ணம், எடுப்பான தோற்றம், பேச்சு மொழி, பாடல், அழகு உணர்ச்சி வெளிப்பாடு, நளினம்...என இன்னும் பிற உளவியல் சார்ந்த காரணிகளும் சேர்ந்து பெண் நடிகர்களின் இருப்பை ரசிகர் மனதில் ஆழமாக ஊன்றுகிறது. அவ்வகையில் 1931இல் காளிதாஸ் பேசும் படம் என தகுதி பெற்று புதிய திரை உலகை ரசிகர்களுக்கு கையளித்தது (Film news Anandan, 2004). டிபி ராஜலட்சுமி தொடங்கி, ராஜகுமாரி, பானுமதி, சுந்தராம்பாள்), பத்மினி, சரோஜாதேவி, சாவித்திரி, சவுகார் ஜானகி, கே. ஆர். விஜயா, ஜெயலலிதா, (Bharathi, 2013). சமந்தா, ஓவியா, ஸ்ருதிஹாசன், வரலட்சுமி, கீர்த்தி சுரேஷ் என நிறைய பெண் தொழில்முறை நடிகர்கள், நிறைய திரைப்படங்களில் பெரும் பங்காற்றியுள்ளனர்.

## திரை வழி இறை

தமிழ் திரைப்படங்களில் எண்ணிலா இறைவியர் படங்கள் வந்து கொண்டே இருக்கிறது. இப்படங்களின் வழி மக்கள் தங்களது மன ஓட்டத்திற்கான மருந்தை, நம்பிக்கையைப் பெறுகின்றனர். திரையில் காட்டப்படும் இறைவியர் பல நேரங்களில் நமது அடியவரை அன்பு சூழ்ந்து காப்பவராக, அறம் கொண்டு வாழச் செய்பவராக, அடியவரின் இன்னல்களை நீக்குபவராக, தீய தன்மையை அழித்து நன்மை அளிப்பவராக சித்தரிக்கப்படுகின்றனர்.

அந்த வகையில், காஞ்சிகாமாட்சி), சர்வம்சக்திமயம், பாளையத்தம்மன் அம்மன்), ராஜகாளியம்மன், கோட்டை மாரியம்மன், படைவீட்டு அம்மன், ஸ்ரீ பண்ணாரி அம்மன், அன்னை காளிகாம்பாள், நாகம்மா, தாலி காத்த காளியம்மன் காக்கும் காமாட்சி அம்மன், ஸ்ரீ ராஜராஜேஸ்வரி..... ஆகியன சில உதாரணங்கள்.

கே. ஆர். விஜயா, சௌந்தர்யா, பானுப்பிரியா, மீனா, ரோஜா, ரம்யா கிருஷ்ணன், நயன்தாரா ஆகியோர் மக்கள் மனதில் பாரிய விளைவை உருவாக்கி உள்ளனர். மக்கள் விரும்பி கொண்டாடுகின்றனர்.

## நடிகர்கள் கொண்டாடுதல் - ஓர் உயர்நிலை

அன்பைக் காட்டும் முறை, வழிபாடு ஆகிறது. எண்ண எழுச்சி வழிபாட்டுத் தன்மையை நிறுவுகிறது. கண்மூடி கைகூப்பி பூ சாற்றி வணங்குதல் - கோவில், மனதால் நினைத்து வணங்குதல் - மூத்தோர் புன்னகையோடு கைகூப்பி வணங்குதல் - ஆசிரியர், உறவினர். வாழ்த்தி வணங்குதல்-நண்பர் சிறியோர். பால், நீர், பூ, என பொருட்கள் கடவுளர் வழிபாட்டிலும் சிலை வழிபாட்டிலும் வாழும் நபர் சார்ந்த வழிபாட்டிலும் தொடர்ந்து பின்பற்றப்பட்டு வரும் நடைமுறையாகும்.

கதை, திரைக்கதை, ஒலி, ஒளி, படத்தொகுப்பு என பல கூறுகள் இருந்தாலும் நடிகர்களின் முகங்களே திரைப்படத்தின் முகவரி ஆகிறது. நடிகர்களே ரசிகர்களின் விருப்ப தூண்டலின் பெரும் காரணியாகின்றனர். இவர்களை நோக்கியே இளம் தலைமுறை நகர்வை முன்னெடுக்கின்றனர். ரசிகர்

மன்றங்கள், ரசிகர் பின் தொடர்புகள், நடிகர் ஆர்மி என பல கட்டங்களில் தொடர்ந்து அவர்கள் இயங்க வழி செய்கிறது.

ஆண் பெண் பேதமின்றி இருபால் நடிகர்களுக்கும் ரசிகர்கள் பட்டாளம் உண்டு. மக்கள் தங்களது விருப்பமான நடிகையின் இருப்பை, தன்மையை உளமார ரசிக்கவும், தொடர்ந்து அவர்களைப் பின் தொடரவும் நவீன ஊடகம் உதவுகிறது (Stevart 2011).

நடிகர் மீதான பெரும் ஈர்ப்பு ஒவ்வொரு மனிதரின் தனிப்பட்ட தன்மையால், விருப்பு, வெறுப்பால் வேறுபடுகிறது. இதனை CWS - பிரபலங்களை வழிபடும் நோய்க்குறி (Celebrity Worship Syndrome) என அழைக்கிறோம்.

காதல் தொல்லை (Love obsessional)

சிற்றின்ப நினைவு (Erotomanic)

சமூக பொழுதுபோக்கு (Entertainment social)

தீவிரமான தனிபட்ட சிந்தனை (Intense personal) மற்றும் எல்லைக்கோடு நோயியல் (borderline pathology) என வகைப் படுத்துகிறது மேற்குலகம்

தமிழகப் பண்பாட்டில் சிந்தனையில் சிறந்தவரை கொண்டாடுதல் என்பது மரபு. அவ்வகையில் இழந்த வீரரை நடுகல் கொண்டு வணங்குவதுண்டு.

## சிலை

"எந்திரம் சிலைக்கும் துஞ்சாக் கம்பலை" பெரும்பாணாற்றுப்படை கூற்று (Kadiyaloor uruthirang kannanaar, 2001). ஒரு நபரை, பொருளை, செயலை மேல் நினைவுகொள்ள உருவாக்கப்படும் அமைப்பு சிலை ஆகிறது. சிலை கல்லால், உலோகத்தால், மரத்தால், மண்ணால், பனிக்கட்டியால், மெழுகால், என பலவாறு உருவாக்கப்படுகிறது. தமிழக கோயில்களில் சிலை, சிற்பம் போன்றன, விழாக் கொண்டாட்டத்தில் மூல, உற்சவ மூர்த்திகளாக ஆராதிக்கப்படுகிறது. அதுவே தலைமுறைகள் கடந்து நின்று நிலைப் பெற்ற வரலாற்றை நீதியை நீடிக்கச் செய்கிறது. 1931 இல் இருந்து இன்று வரை நிறைய திரைச் சாதனைப் பெண்கள் இருப்பினும், சிலரே வரலாற்றில் தொடர்ந்து வாழ்ந்து வருகின்றனர். அவ்வகையில் சிலருக்கு கட் அவுட், பேனர், படங்கள் என வைக்கப்பட்டு அபிஷேகமும் செய்யப்பட்டு பூசிக்கப் படுகின்றனர். சிலருக்கு சிலை நிறுவப்பட்டு அவர்தம் இருப்பு கோவிலில் வழிபாடு ஆக்கப்படுகிறது. அவ்வகையில் நடிகை குஷ்பு அவர்களின் கோவில் திருச்சியில் கட்டப்பட்டு பின் இடிக்கப்பட்டது. சிலை கலாச்சாரத்தின், வரலாற்று ஆவணமாக ஆனது. தஞ்சைப் பெரிய கோவில் - பெரு உடையார் சிலை - கடவுள். ராஜராஜன் சிலை - அரசன், பாம்பாட்டி சித்தர் சிலை - மருதமலை கோவை - புனித மனிதர், கண்ணகி சிலை - கண்ணகி கோவில் - சிறந்த பெண். பெரும் அரசியல் தலைவர்கள் சிலை (பெரியார், அண்ணா, முத்துராமலிங்கத் தேவர்), திரைத்துறை முன்னோடிகள், (எம்.ஜி. ஆர். கருணாநிதி, சிவாஜி, ஜெயலலிதா) என பலவாறு சிலைகள் நிறுவப்பட்டு தொடர்ந்து கொண்டாடப்பட்டு வருகிறது.

## முடிவுரை

இறைவி, அரசி, தலைவி, நாயகி, என பெண்கள் தமிழ் சமூகத்தின் போற்றுதலின், வழிபாட்டின் அங்கமாக இருந்து வருகின்றனர். பெண் சார்ந்த ஓவிய சிற்ப, நகரும் படம் என அவர்களின் வடிவமும், உருவமும் நினைவுக் கூர்தலின் நீட்சியாக உள்ளது. அவை கருத்து உருவாக்கத்திற்கு துணை செய்கிறது. மக்களின் நம்பிக்கையின் மீதும், அவர் மனங்களில் மீதும் மதிப்பை, உணர்வை, சிந்தனையை, மாற்றத்தை அதன் தொடர்ச்சியான எண்ண அலைகளை உருவாக்கிக்கொண்டே இருக்கிறது. அதுவே மக்களை உருவ வழிபாட்டிற்கு இட்டுச் செல்கிறது. உணர்வு மாற்றத்திற்கு ஆட்படுத்துகிறது. பெண்கள் மீதான பிம்ப உருவாக்கம், படைப்பாளி, ரசிகர்களின் எண்ண விளைவு மட்டுமன்று. அது ஒரு அக, புறத்

தூண்டுதல். அழகை ஆராதிக்கும் அனுபவம். அது ஒரு மிகை அன்பு நிலை. காட்சிகள் வழி அன்பை மீட்டுருவாக்கம் செய்யும் சக்தி நிலை. கலையின் வெளிப்பாடு. தமிழ் திரைத் தாயை, பாடல்கள் ஊடே தொடர்ந்து கொண்டாடி கொண்டே இருப்பது சிறந்த எடுத்துக்காட்டு. கலையின் வெளிப்பாடு பன்னெடுங்கால ஆயுள் கொண்டவை. மக்கள் இறந்த பின்னும் சிலைகள் வாழ்கிறது. அதன் இருப்பு வரலாற்றில் நீள்கிறது. கடவுள், அரசியல், ஆளுமை, கலை, பிரபலங்கள் என சிலைகளின் எண்ணிக்கை அந்தந்த கால, சமூக வளமையைத் தீர்மானிக்கிறது. அதுவே பிற்கால வரலாற்றை மறு வாசிப்பிற்கும் தொடர் தேடலுக்கும் உட்படுத்தும் காரணியாகிறது. சிலைகள் செதுக்கப்படுவது, வெட்டப்படுவது, மாற்றப்படுவது, நிறுவப்படுவது சமூக கட்டமைப்பின் மீது பங்களிக்கிறது. அதுவே, பண்பாட்டு வரலாற்றின் தொடர்ச்சியாக மக்களுக்குப் படமும் பாடமும் ஆகிறது. கலாச்சார தளத்தின் மீது படரும் கவின் மிகு காட்சியாகிறது. தனிப்பெரும் தடமாகிறது. சுவடாகிறது. கரம் கூப்புவதும், மறுப்பதும் அவரவரின் தனித்த விருப்பத் தேர்வாகிறது.

## References


Bharathi K., (2013) Tamil Cinimaavil Penkal, Vikatan Publication, Coimbatore, India.

Bharathidasan, (2016) Bharadhidasan Poem, Pennulagu, Karpagam Puththakalayam, Chennai, India.

Film News Anandan, (2004) Saathanaikal Padaiththa Thamilthirappada Varalaaru, Sivagami Publications, Chennai, India.

Ilangovadikal, (2005) Silappathikaaram, Uma Publication, India.

Iyaarinathanar, (2009) Purapporul Venba Maalai, Saradha Publication, Chennai, India.

Kadiyaloor Uruthirang Kannanaar, (2001) Permbaanatrupadai, Sarada Padippagam, Chennai, India.

Mucutcheon, L.E. Lange, R, & Houranj, (2002) Conceptualization & Measurement of Celebrity Worship, British journal of Psychology, 93 (1) 67-87, https://doi.org/10.1348/000712602162454

Paramasivan, Tho., (2006) Theiyvam Enpathor, Kalachuvadu Publication, Nagercoil, India.

Stevart, G.S., (2011) Celebrity Worship Critiquing a Construct, Journal of Applied Social Psychology, https://doi.org/10.1111/j.1559-1816.2011.00765.x



**Funding:** No funding was received for conducting this study.


**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**


Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License